REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 14உ செவ்வாய் (30—8—55) ★ ★ வெளியூர்: ஆவணி 15உ புதன் (31—8—55) [இதழ் 66

திராவிடத்தில் இயற்கை எரிவாயு!

சென்னை, ஆந்திர மாநிலங்களில் இரண்டொரு இடங்களில் இயற்கையாகவே பூமியினடியிலிருந்து எரி வாயு கிடைப்பதாக 'பூகர்ப்ப சர்வே'யின்போது தகவல் கிடைத்திருக்கிறதாகத் தெரிகிறது.

கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் தலிபகா கிராமத்திலும் கிருஷ்ணா மாவட்டத்தில் மசூலிப்பட்டணம் அருகிலும் தஞ்சை, சீர்காழி அருகே கெய்பட்டு கிராமத்திலும் எரி வாயு கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஆந்திராவுக்கும் 'பட்டை நாமம்'!

ரூ. 225 கோடித் திட்டம் ரூ. 125 கோடியாகும்?

2-ம் திட்டம்: தென்னாட்டு மாநிலங்கள் பெறும் பங்கு?

புதுடில்லி, ஆக. 29—

ஆந்திராவின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 125 கோடி மதிப்புக்குமேல் இருக்க முடியாது என்று கூறப்படுகிறது.

ரூ. 225 கோடி பெறுமான அளவுக்கு ஆந்திரா தயாரித்த நகல் திட்டத்தை ஏறத்தாழ சரிபாதியாக—சென்னைத் திட்டத்தைப்போலவே குறைத்துவிட, தேசிய திட்டக் குழு முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது.

திட்டக் குழுவினர் கருத்துப்படி, ஆந்திரத் திட்ட மதிப்பு ரூ. 125 கோடிக்கு மேல் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்று நம்பகமாகக் கூறப்படுகிறது.

மாநிலத்தின் மக்கள் தொகைக் கணக்குப்படி பார்த்தால், சுருக்கப்பட்ட திட்டம், ஏறக்குறைய அதற்குரிய பங்கு அளவுதான் இருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

முதலில் ரூ 500 கோடியளவில் உருவான ஆந்திரத் திட்டம், பின்னர், திட்டக்குழுத் துணைத் தலைவருடன் ஆந்திர முதன் மந்திரி நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு சுமார் ரூ 225 கோடி அளவாகக் குறைந்தது.

அந்தத் திட்டமும் இப்போது சரிபாதியாகத் திட்டக்குழுவால் வெட்டப்பட்டுவிடும் என்று கூறப்படுகிறது.

திட்டம் பற்றி ஆக. 31, செப். 1-ந் தேதிகளன்று திட்டக் குழுவுடன் ஆந்திர மந்திரிகள் விவாதிப்பர் என்று தெரியவருகிறது.

கொள்ளைத் தலைவனின் மூத்த சகோதரன்

உயிருடன் இருக்கிறானும்

குவாலியர், ஆக. 29—

சுட்டு வீழ்த்தப்பட்ட கொள்ளைத் தலைவன் மான்சிங்கின் மூத்த சோதரனான நவாப் சிங், இன்னும் உயிருடன் இருப்பதாகவும், அவன் இருக்குமிடம் இன்னும் போலீசார் கண்களுக்குப் படவில்லை என்றும் அதிகார பூர்வமான செய்திகள் கூறுகின்றன.

* * *

சடலங்கள் எரிந்தன!

மான்சிங், அவன் மகன் சுபேதார் சிங் இருவரையும் சுட்டு வீழ்த்திய போலீசாரின் வீரத்தை மத்திய பாரத் மந்திரிகள் பாராட்டியிருக்கின்றனர்.

கொல்லப்பட்ட அந்த இரு கொள்ளைத் தலைவர்களின் சடலங்களும், போலீஸ் மைதானத்தில் 12 மணி நேரம் வைக்கப்பட்டிருந்த பின், அருகில் உள்ள சாக்காட்டிற்கு, லாரிகளில் எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்பட்டன என்று தெரிய வருகிறது.

* * *

அவனும் சுடப்பட்டான்?

லக்னோ, ஆக. 30—

மான்சிங்கின் மூத்த சோதரரான நவாப் சிங்கும் நேற்றைய முன்தினம் சுட்டு வீழ்த்தப்பட்டார் என்று போலீஸ் அலுவலகச் செய்தி ஒன்று கூறுகிறது.

'பெல்லாரி பிரச்சினையை மீண்டும் எழுப்புக'

மத்திய உள்நாட்டு மந்திரியிடம் ஆந்திர தூதுக் குழு முறையீடு

ஐதராபாத், ஆக. 29—

பெல்லாரி மாவட்ட ஆந்திர சமிதியைச் சேர்ந்த 10 பேரடங்கிய தூதுக் குழு ஒன்று தோழர் வெங்கட சுப்பாராவ் என்பவர் தலைமையில் மத்திய உள்நாட்டு மந்திரி பண்டித பந்தைச் சந்தித்து, பெல்லாரி பிரச்சினையை மீண்டும் கிளப்ப வேண்டும் என்றும், துங்கபத்திரா அணைக்கட்டு உட்பட பெல்லாரி மாவட்டப் பகுதிகள் ஆந்திராவுடன் இணைக்கப்பட வேண்டும் என்றும், அந்தப் பகுதி மக்களின் பொருளாதார நல்னிலையை கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் கோரி, மனு ஒன்று தந்திருக்கின்றது.

மாநில புனரமைப்புக் குழு மூலம், பெல்லாரி பிரச்சினையைத் திரும்பவும் எழுப்பிக் கவனிப்பதாக இந்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டிருப்பதாக அந்தத் தூதுக் குழு, மந்திரியிடம் எடுத்துக் காட்டியிருக்கிறதாம்.

மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை மத்திய அரசாங்கம், மக்கள் சபை இவற்றின் முன் வைக்கப்படும்போது, பெல்லாரி பிரச்சினை பற்றி உள்நாட்டு மந்திரியே அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் தூதுக்குழுவினர் கோரினராம்.

"கடந்த ஆயிரம் ஆண்டுகாலமாக பெல்லாரி, இராயலசீமா பகுதியாகவே நிர்வாகம், வர்த்தகம், கலாச்சாரம், சமூக உறவுகள், ஆகியவற்றால் கருதப்பட்டு வந்திருக்கிறது; எனவே, இந்த இரு மொழி பேசும் வட்டாரத்தின் 'தலைவிதி'யை, மொழியை அடிப்படையாகக் கொண்டு தணிக்கக் கூடாது," என்று தூதுக்குழுவினர் கோரினராம்.

"பெல்லாரி மைசூர் மாநிலத்துடன் இணைக்கப்பட்டதின் விளைவாக, பெல்லாரி நகரின் பொருளாதாரமே அழிக்கப்பட்டு விட்டது"

என்றும் தூதுக்குழுவினர் தெரிவித்தனராம்.

கோவா விடுதலை

இறுதிவரை 'போராட்டம்'

சகல கட்சி விடுதலைக் குழு முடிவு

"இறுதி வெற்றி பெறும்வரை தனிப்பட்டவர்களாலும், கோஷ்டிகளாலும், தொடர்ந்து 'சத்தியாக்கிரகத்தை' நடத்துவது," என்று, சகல கட்சி கோவா விடுதலைக்குழு, இரண்டு நாள் மாநாட்டிற்குப் பிறகு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

கோவாவில், போர்ச்சுகீசியர், அடக்குமுறையை பெரும் அளவில் கட்டவிழ்த்துவிட்ட போதிலும், தொடர்ந்து 'போராட' வேண்டுமென அந்தக் குழு கருதுகிறதாம்.

இந்தியாவின் புனித மண்ணில் அன்னிய ஆதிபத்தியம் இடம் பெற்றிருப்பதை ஒழிக்க தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மக்கள் தொடர்ந்து தங்களின் ஆதரவை நல்க வேண்டுமென்றும் குழுவினர் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

★

நேரு மீண்டும் கூறுகிறார்

"கோவா மக்கள் விரும்புவதை போலவே, கோவா பிரச்சினைக்கு சமாதான வழிகளாலேயே பரிகாரம் தேடப்படும்," என்று பண்டித நேரு மீண்டும் கூறியிருக்கிறார்.

அதே நேரத்தில், 'ஒரு நாடு, மற்ற நாட்டு மக்களின்மீது ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பதையும், நாம் பொறுத்துக் கொள்ள இயலாது' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

"கோவாவில் நடைபெற்ற சம்பவங்களால் நம்முடைய நாட்டில் எத்தனை உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோடியது? என்றாலும் கூட, நாம் இந்த நிகழ்ச்சிகளால் மனங்குன்றிவிடாமல், நமது சமாதானக் கொள்கைகளினின்றும் வழுவிவிடாமலிருந்து வந்திருக்கிறோம்," என்றும் பண்டிதர் தெரிவித்திருக்கிறார்.

★

பண்டித பந்தின் நம்பிக்கை

"கோவா என்றாவது ஒருநாள் இந்தியாவுக்குக் கிடைத்தே தீரும்; எனவே, இந்தப் பிரச்சினை குறித்து மக்கள் மனம் குழம்பத் தேவை இல்லை," என்று, யூனியன் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

'நெருக்கடி நிலைமை'

144 தடை உத்தரவு

சென்னை, ஆக. 30—

உழவர்களுக்கும் — நிலச்சுவான்தார்களுக்கும் இடையில் 'நெருக்கடி நிலைமை' ஏற்பட்டிருப்பதால், ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில் மாத்தூர்; ஜமுனம்பேட்டை, மாத்தூர் சேரி ஆகிய கிராமங்களில் தாலுகா மாஜிஸ்திரேட் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார். இரண்டு மாத காலத்திற்கு இவ்வுத்தரவு அமுலில் இருக்கும்.

பயிறு வகைகள் சாகுபடி

நடப்பு ஆண்டில் மொத்தம் 5,40,04,000 ஏக்கராவில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றன என்றும், மொத்தம் 1,04,74,000 டன் உற்பத்தியாகுமென்றும் தெரிய வருகிறது.

நிலப்பிரபு-விவசாயிகள் மோதுதல்

ஆறு பேர் பலி; பலருக்குக் காயம்

விவசாயிகள் மீது நிலப் பிரபுக்களின் ஆட்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்

பாட்னா; ஆக 28—

பகல்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரெய்ப்பூர் எனுமிடத்தில் நிலப் பிரபுக்களின் ஆதரவாளர்களுக்கும் —விவசாயிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதுதல் ஒன்றினால் ஆறு பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்; சுமார் 20 பேர் வரை காயம்பட்டிருக்கின்றனர்.

ஒரு சில நிலத்துண்டு யாருக்குச் சொந்தம் என்பதினாலேயே இந்த தகராறு எழுந்ததாம்; அந்த நிலத்தை உழுது பயிரிட்டு, விளைவில் ஒரு பகுதி பெறும் விவசாயிகளுக்கு இந்தத் தடவை அந்த நிலத்தில் உழுது பயிரிட உரிமை தரப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

இறந்துபட்டவர்களுடன் காயம் பட்டவர்களும், பகல்பூர் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனராம்.

நிலப் பிரபுக்களின் ஆட்கள் விவசாயிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக ஒரு செய்தி கூறுகிறது.

புதுவை மந்திரிகள் சம்பள விவரம்

புதுவை சர்க்காரிலுள்ள ஆறு அமைச்சர்களும் மாதச் சம்பளமாக தலா ரூ. 500 பெறுவராம்; இது தவிர, குடியிருப்பு வாடகையாக ரூ. 200-ம், 'பிரயாணப் படி'யும் அவர்களுக்குத் தரப்படுமாம்.

வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட கணவனை வீட்டை விட்டுத் துரத்திய மனைவி!

தன் கணவர் வேலை செய்யும் கடையைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

'அது கூடாது,' என்று கருதிய எஸ்தர் குயிக்லி என்ற பெண்மணி, தனது கணவர் வீட்டிற்குள் நுழையக் கூடாதென்றும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் மணவிலக்கு செய்துவிடுவதாயும் அச்சுறுத்தி 'கதவடைப்பு' செய்ததாக செய்தி ஒன்று கூறுகிறது.

தன்னுடைய கணவர், அவருடைய சகாக்கள் எல்லோரும் வேலைக்குத் திரும்பும்படி செய்ய வேண்டும் என்றும் அந்த அம்மையார் கோரினாராம்!

சிகாகோவிலிருந்து கிடைத்துள்ள இந்தச் செய்திப்படி, 35 வயதும் நான்கு குழந்தைகளுக்கும் தாயான அந்த அம்மையார், தனது கணவரான ஆண்ட்ரூவை, வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி தூண்டி, வீட்டைவிட்டு வெளியேற்றி வைத்திருக்கிறாராம்!

கோதாவரி நதியில் பெரும் வெள்ளம்

50 கிராமங்களும் — 3,000 ஏகர் நிலமும் நீரில் மூழ்கின

தாடேபள்ளிகூடம், ஆக. 29—

கோதாவரி நதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால், சுமார் 50 கிராமங்களும், 3,000 ஏகர் நிலமும் நீரில் மூழ்கிச் சேதப்பட்டிருக்கின்றன.

தவளேஸ்வரம் அணைக்கட்டில் அளவுக்கு அதிகமாக 14·1 அடி—அதாவது, சுமார் .60 அடி தண்ணீர் நிரம்பியுள்ளதாம்.

இந்த கோதாவரி வெள்ளப் பெருக்கினால் சுமார் 7 இலட்சம் ரூபாய் நஷ்டமேற்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஜெகனாதபுரம், மாதவரம் ஆகிய ஊர்களினிடையே போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பஸ்கள் இப்போது அனந்தப்பள்ளி வரையில் தான் போக முடிகிறது.

வெள்ளத்தில் மூழ்கிய 50 வீடுகளுக்கும் மேலாக, சுமார் 250 வீடுகள் சேதமடைந்துள்ளன. சுமார் 1,000 பேர் வீடின்றித் தவிக்கின்றனர் என்று தெரிகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 30—8—'55 செவ்வாய்

'ஆபத்தான சக்திகள்'!

"மத்திய ஆட்சியைப் பலவீனப்படுத்துகிற சக்திகள், இயக்கங்கள் தென்னாட்டிலிருக்கின்றன;

"அந்த சக்திகள் ஆபத்தானவை;

"அந்த ஆபத்தான சக்திகள், 'தேசிய மொழி'யான இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்கின்றன;

"வட நாடு — தென்னாடு என்று பிரிவினை மனப்பான்மையுடன், வேறுபடுத்திப் பேசுகின்றன;

"தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் எந்த வகையாலும் வேறுபாடு இருப்பதாகக் கூறுவதற்கு நியாயமில்லை;

"ஐதராபாத்தில் ஒரு 'ராஷ்டிரபதி நிலையம்' ஏற்படுத்தியிருப்பது, தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்;

"எனவே, இந்த ஆபத்தான சக்திகளை ஒழிக்க மக்கள் ஒன்றுபட வேண்டும்,"

என்று, இந்தியப் பேரரசின்—வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் உள்நாட்டு மந்திரி பண்டித கோவிந்த வல்லப பந்த் மூன்று நாட்களுக்கு முன்பாக, ஐதராபாத் காங்கிரஸ் ஊழியரிடை பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'ஆபத்தான சக்திகள்—பிரிவினை எண்ணங்கொண்டோர்—மத்திய ஆட்சியைப் பலவீனப்படுத்துபவர்கள் — தேசிய மொழியான இந்தியை எதிர்ப்பவர்கள் — வடநாடு-தென்னாடு என்று பிரித்து வேறுபடுத்திப் பேசுகிறார்கள்' —இவை எல்லாம், "தன்னாட்சி கோரும் திராவிடர்களின் 'போர்ப் படை' யாக விளங்கும் திராவிடர் இயக்கத்தைப் பற்றி நான் ஓரளவுக்குத் தெரிந்துகொண்டிருக்கிறேன்," என்று, பண்டித பந்த் கூறுவதாகப் பொருள்படும் உண்மைகள்!

'தென்னாட்டிற்கும் - வடநாட்டிற்கும் எந்த வகையாலும் வேறுபாடு இருப்பதாகக் கூறுவதற்கு நியாயமே இல்லை—ஐதராபாத்தில் ஒரு 'ராஷ்டிரபதி நிலையம்'. ஏற்படுத்தப்பட்டிருப்பது, தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை என்பதற்கு ஒரு நல்ல உதாரணம்' —இவை, "திராவிடரின் இலட்சியத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை," என்பதை, பண்டித பந்த் தெரிவிப்பதாகப் பொருள்படும் முழுப் பொய்கள்!

'இந்த ஆபத்தான சக்திகளை ஒழிப்பதற்கு மக்கள் ஒன்றுபட வேண்டும்'—இது, "தனி நாடு—திராவிட நாடு வேண்டும் என்று கோருபவர்களை ஒழித்துக் கட்ட மத்திய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது," என்று, பண்டித பந்த் கூறுவதாகப் பொருள்படும் மிரட்டல்!

பண்டித பந்தின் கூற்றுக்களில் ஒரு பகுதி உண்மை; ஒரு பகுதி அப்பட்டமான பொய்; மறு பகுதி மிரட்டல்!

'திராவிடர் இயக்கம், மத்திய ஆட்சியைப் பலவீனப்படுத்தும் சக்தி,' என்று உரைத்திருக்கிறார் பந்த்; இது திராவிடர் இயக்கத்தின்—குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முழு பலத்தையும் தெரிந்துகொள்ளாததின் விளைவாக எழுந்த கணிதம்.

தி. மு. கழகம், மத்திய ஆட்சியைப் பலவீனப்படுத்தும் இயக்கம் மட்டுமல்ல; கடந்த ஆண்டில், பண்டித நேரு, 'ஆட்டவும் அசைக்கவும் முடியாத மத்திய சர்க்கார் மூலம்தான், நாம் இந்தியாவின் அரசியல் ஒற்றுமையை நிலை நாட்டி வருகிறோம்,' என்று இறுமாப்புடன் கூறியுள்ளாரே, அந்த 'ஆட்டவும்—அசைக்கவும் முடியாதது' என்று அவர் கருதிக்கொண்டிருக்கிற இந்திய மத்திய ஆட்சிக்குத் தென்னாட்டில் இருக்கிற ஆதிபத்திய உரிமையை ஒழிப்பதற்காக, அந்த ஆட்சியை ஆட்டி, அசைத்து, அதன் மூலம் நிலைநாட்டப்பட்டுவரும் 'அரசியல் ஒற்றுமை'யை சீர்குலைத்து, 'சுதந்திர திராவிட நாடு' அமைக்கிற ஆற்றலைப் பெற்றுள்ள வீரம் மிகுந்த திராவிடர் இனத்தின் 'போர்ப் படை'தான் தி. மு. கழகம்.

மத்திய ஆட்சியைப் பலவீனப்படுத்துவதற்கு, ஒரு இயக்கம் தேவை இல்லை என்பதைப் பண்டித பந்த் உணர வேண்டும்.

திராவிடத்தின் விடுதலையைப் பறித்து, அவர்களை அடக்கி ஆளும் வாய்ப்பு பெற்றிருக்கிற மத்திய ஆட்சி, விடுதலையைப் பறிகொடுத்து நிற்போரால் ஆட்டப்பட்டு—அசைக்கப்படும்போது, அந்த ஆட்சியின் 'பலாபலன்'களை அனுபவித்து வருபவர்களுக்கு 'ஆபத்து' ஏற்படுவது தவிர்க்க முடியாதது; அந்த 'ஆபத்து'க்கு ஆளாவோர், 'ஐயோ! ஆபத்து!' என்று ஓலமிடுவதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

பண்டித பந்த், திராவிடர் இயக்கத்தை, 'ஆபத்தான சக்திகள்' என்று கூறுவது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

'தேசிய மொழி'யான இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்கிறோமாம் நாம்; உண்மைதான்; நமது 'தேசம்' இந்தியா அல்ல; 'எங்கள் நாடு, திராவிடம்' என்று கூறும் திராவிடர், இந்தியை எப்படி தங்களின் 'தேசீய மொழி'யாக ஏற்றுக்கொள்வர்? தங்கள் நாட்டு மொழியாக இந்தி இல்லாததால்—வேறு அன்னிய நாட்டு மொழியாக இந்தி இருப்பதால் அதனை எதிர்ப்பதில் தவறென்ன?

வடநாடு—தென்னாடு என்று வேறுபடுத்திப் பேசுகிறோமாம் நாம்; உண்மைதான். 'தென்னாடு வேறு—வடநாடு வேறு' என்ற உண்மையை, நம்மால் கூறாமலிருக்க முடியாதே! நாம் இருந்தாலும், வரலாறு, கூறிக்கொண்டிருக்கிறது—'தெற்கும்—வடக்கும் வேறு வேறு திசைகள்' என்று!

"தென்னாட்டிற்கும் — வடநாட்டிற்கும் எந்தவகையாலும் வேறுபட்டு இருப்பதாகக் கூறுவதற்கு நியாயமே இல்லை," என்று பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிறார்.

வரலாறுகள் கற்றவர்தான் பண்டித பந்த்; ஆனாலும், 'நியாயமில்லை' என்கிறார். மறந்துவிட்ட வரலாற்றுப் பாடங்களின் 'அரிச்சுவடி'யை அவர் திரும்ப ஒருமுறை கவனப்படுத்திப் பார்க்க வேண்டுமென்பதே, நாம் அவரது இந்தக் கூற்றுக்குத் தரத்தக்க பதில்!

'எந்த வகையால், தென்னாடும் — வடநாடும் ஒன்று' என்று பண்டித பந்த் நமக்கு விளக்க முயற்சிக்க வேண்டும்; அப்போது அவர் அறிவார், தனது இயலாமையை!

'தென்னாடு வேறு; தென்னாட்டவர்—திராவிடர் வேறு மக்கள்;

'வடநாடு வேறு; வடநாட்டு இந்தோ—ஆரியர் வேறு,' என்பதை, உணர்த்துகிற வரலாற்றுச் சுவடிகளை நாம் பன்முறை விளக்கிக் கூறியிருக்கிறோம்; அவற்றை எல்லாம் பண்டித பந்த் தெரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

இப்போதுதானே, நம்மைப் பற்றி—இன்னும் பெயர் கூறாமல்தான் பேச முற்படுகின்றனர்; நம்மைப்பற்றி-திராவிடர் இயக்கம் பற்றி - தி. மு. கழகம் பற்றி அவர்கள், 'பால பாடம்' தான் படித்துக்கொண்டிருக்கின்றனர் என்று தோன்றுகிறது; அடுத்தடுத்து நம்மைப் பற்றிய பாடங்களை அவர்கள் தொடர்ந்து படிக்கத்தான் போகின்றனர்!

ஐதராபாத்தில் 'ராஷ்டிரபதி நிலையம்' அமைவது குறித்து நாம் ஏற்கனவே கருத்து தெரிவித்திருக்கிறோம்.

வட நாட்டு ஏகாதிபத்தியத்திற்கு 'ஆபத்தான சக்தி'களாக திராவிடர் இயக்கம் காட்சி தருவதே, தி. மு. கழக வளர்ச்சி, அந்த ஆதிபத்தியக்காரர்களுக்கு ஊட்டியிருக்கிற அச்சத்தின் விளைவுதான்!

இந்தியாவுக்கு

மின்சார எஞ்சின்கள்

கல்கத்தா மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ஹௌரா - பர்துவான் மின்சார இரயில் பாதையில் உபயோகிக்க 12 மின்சார இரயில்வே எஞ்சின்களை 'இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி'யிடமிருந்து கொள்முதல் செய்ய இந்திய இரயில்வே போர்டு நிச்சயித்திருக்கிறது. இவற்றின் விலை சுமார் 8,00,000 பவுன்கள்.

இவ்வாண்டுத் துவக்கத்தில் 'இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி'யிடமிருந்து மத்திய இரயில்வே ஏழு மின்சார இரயில் எஞ்சின்களை வாங்கியுள்ளது.

ஆராய்ச்சி ராக்கெட்டுகள்...

1957-ல் அனுப்பப்படுமாம்!

மிகவும் உயரத்தில் போகும் ராக்கெட்டுகளை அமெரிக்கா அனுப்பப் போகிறதாம்; அந்த ராக்கெட்டுகளில் ஆராய்ச்சிக் கருவிகள் இருக்கிறதாம்.

1957 ஜூலை 1-ந் தேதி முதல் 1958 டிசம்பர் 31-ந் தேதிவரை சராசரி மாதத்திற்கு 10 ராக்கெட்டுகள் அனுப்பப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத்தில் உணவு உற்பத்தியை அதிகரிக்க திட்டங்கள்

மத்திய ஆட்சியினர் நிதி வழங்குகின்றனர்!

புதுடில்லி, ஆக. 28—

உணவு உற்பத்தி அதிகரிப்புத் திட்டத்திற்கென சென்னை சர்க்காருக்குக் கடனாக ரூ. 1,53,87,000-மும், மானியமாக ரூ. 4,62,000-மும் மத்திய சர்க்கார் வழங்கியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

மீன் பிடித்தல், நவீன நெல் விதைகள், நல்ல விதைகள் சேகரிப்பு இவற்றிற்கான திட்டங்களுக்கு மானியம் வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது.

ரூ. 9½-கோடி பெறுமானமுள்ள

நகைகள் எங்கே?

பரோடா முன்னாள் மன்னர்—மனைவி தகராறு

பம்பாய், ஆக. 28—

பரோடா மன்னர் குடும்பத்திற்குச் சொந்தமான ஒன்பதரை கோடி ரூபாய் பெறுமானமுள்ள நகைகளைத் தேடிக் கண்டுபிடிக்குமாறு இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள சுங்க அதிகாரிகளை இந்திய சர்க்கார் கேட்டிருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:— பரோடா முன்னாள் மன்னருக்குச் சொந்தமான நகைகளில் ஒரு பகுதி அம்மன்னரின் ஒரு மனைவியான சீதாதேவியிடம் இருந்தது, பம்பாய் மாநிலத்துடன் பரோடா இணைந்ததை ஒட்டி சர்தார் படேல் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, நகைகளில் ஒரு பகுதி திருப்பித் தரப்பட்டது; பாக்கி நகைகளையும் ஒப்புவிக்க முன்னாள் மன்னர் வாக்களித்திருந்தார்.

சீதா தேவிக்கும்—மன்னருக்கும் தகராறு ஏற்பட்டதற்குப் பின்னர், அந்த நகைகளை சீதா தேவி எடுத்துச் சென்றுவிட்டதாகவும், அவை இருக்கும் இடம் தெரியவில்லை என்றும் கூறப்பட்டது. நகைகளை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு மன்னர் கோரப்பட்டார்; ஆனால், இருப்பிடம் தெரியாமையினால், நடவடிக்கை எடுக்க இயலாது போயிற்று.

தென்னாப்பிரிகாவைச் சேர்ந்த ஒரு 'முன்னாள்' குற்றவாளியின் 'வலை'யில் சீதாதேவி சிக்கிக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

அந்த நபர்தான், சுங்க அதிகாரிகள் கண்ணில் 'மண் தூவி'விட்டு ஊர் ஊராக அந்த நகைகளை எடுத்துச் சென்று பதுக்கிவருகிறாராம்.

ஐரோப்பாவில் உள்ள பிரபல நகை வியாபாரிகளுக்கு பழக்கமான அந்த நபர், இந்த நகைகளைக் கடத்துவதில், அவ்வியாபாரிகளின் உதவியையும் பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

நகைகளை விற்றுவிட அந்த 'பலே' பேர்வழி தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக அண்மையில் வெளியான தகவல் ஒன்று கூறுகிறதாம்.

இத்தனைக்குமிடையில் சீதா தேவி, தனது கணவரிடமிருந்து மணவிலக்கு செய்துகொள்ள பாரிஸ் நகரில் மனுச் செய்திருக்கிறார். முன்னாள் மன்னரோ, 'மண விலக்கு வழங்க அந்த பாரிஸ் நீதி மன்றத்திற்கு அதிகாரமில்லை,' என்று எதிர்த்திருக்கிறார்.

சீதாதேவிமீது ஒரு 'வாரண்ட்' இருப்பதுபோல கற்பித்து, அவர் இந்தியாவுக்குச் செல்ல முடியாதென வாதிக்கப்பட்டதின் பேரில், சீதாதேவியின் மணவிலக்கு மனுவை விசாரிக்க அதிகாரமிருப்பதாக நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

முன்னாள் மன்னர், இந்த தீர்ப்புக்கு எதிராக 'அப்பீல்' செய்திருக்கிறார். இவரும், சீதாதேவி வேறு ஒருவருடன் 'உறவு' வைத்துக்கொண்டிருப்பதாகக் கூறி, மணவிலக்கு வேண்டுமென பம்பாய் நீதி மன்றம் ஒன்றில் இன்னும் சில நாட்களில் வழக்குத் தொடருவார் என்று கூறப்படுகிறது.

பல நாடுகளின் சுங்க அதிகாரிகள் நடத்தவிருக்கும் புலன் விசாரணையின்போது திடுக்கிடும் தகவல்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

'நெய்வேலி' திட்டம்

துவங்காமலிருப்பது ஏன்?

மத்திய சர்க்கார்தான் பொறுப்பு?

நெய்வேலியில் நிலக்கரி தோண்டும் திட்டம், பலன்தரக்கூடிய சாத்தியமான ஒன்றே.

ரூ 47 கோடி செலவாகும் இத்திட்டம், அமுல் செய்யப்படுவதற்கு மத்திய அரசாங்கத்தின் 'துவங்குக' என்ற உத்தரவு வரவேண்டியதுதான் பாக்கி என்ற நிலையிலிருக்கிறது

திட்டம் துவங்காமல் இருப்பதற்கு, தொழில் நுட்பம் சம்பந்தமான காரணம் எதுவும் இல்லை; அல்லது, நிதிவசதி இல்லை என்பதும் அல்ல; ஆனால், 'இந்தத் திட்டம் இன்னும் காலந்தாழ்த்தப்படலாம்!' என்று, இந்திய சர்க்கார் அதிகாரிகள் எண்ணுவதே, திட்டம் அமுலாகாமலிருப்பதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

உண்மையான 'அதிசய பூமி'!

குழந்தைகளுக்கான 'பால பவன்'

சௌராஷ்டிரத்தில் பெருஞ்செலவில் அமையும்

ராஜ்கோட், ஆக. 25—

உண்மையான 'அதிசய பூமி' ஒன்றை பெருஞ்செலவில் உருவாக்க, அகில இந்தியக் குழந்தை நலப் பாதுகாப்புக் குழுவின் சௌராஷ்டிரக் கிளை முடிவு செய்திருக்கிறதாகத் தெரிகிறது.

'பால பவன்' என்ற பிரும்மாண்டமான மாளிகை ஒன்றை சுமார் 1-இலட்சம் ரூபாய் செலவில் கட்டவும்' திட்டமிட்டிருக்கின்றனராம்.

அந்த 'பால பவன'த்தில் குழந்தைகளுக்கான புத்தகசாலை, படிப்பகம், கண்காட்சி சாலை, நாடகமாடுவதற்கான அரங்கு, கூட்டம் நடத்துவதற்கான மண்டபம் ஆகியவை எல்லாம் இடம் பெற்றிருக்குமாம்.

அங்கு ஒரு பால் பண்ணை நிறுவப்படுமாம்; குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் தரும் முகாமும் இருக்குமாம்.

மேலும், அங்கு அருங்கலை, கைத்தொழில் கூடங்களும் இருக்கும் என்றும், அவற்றில், குழந்தைகளின் கலைத்திறனும், செயல்திறனும் வளர்க்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும் என்றும் வர்ணிக்கப்படுகின்றது

குழந்தைகள், இளைஞர்கள் தேக நலம், சுகாதாரம் பற்றி குழந்தைகளின் பெற்றோர்களுக்கு விபரங்களும், அறிவுரைகளும் தரும் சுகாதார நிலையம் ஒன்றும் அந்த மாளிகையில் இடம் பெறுமாம்.

குழந்தைகள் நலப் பாதுகாப்பு முகாம்களில் பணிபுரிவோருக்கு முறைப்படியும், விஞ்ஞான நீதியாகவும் பயிற்சி தரப்படுமாம்.

மாளிகையைச் சுற்றிலும் பூங்கா ஒன்று உண்டாக்கப்படும்; ஒரே நேரத்தில் ஆயிரம் குழந்தைகள் விளையாடுவதற்கு தேவையான வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானமும் ஏற்படுத்தப்படுமாம்!

‘பேணி வளர்த்த பண்பாட்டை இழந்தோம்’

‘பட்ட மரம் துளிர்க்குமா— என்று இன்று ஏங்குகிறோம்!’

‘ஏற்றத் தாழ்வுகளை ஒழித்தால் மீண்டும் ஏற்றம் பெறுவோம்’

மதுரையில் அண்ணா

“ உலக வரலாற்றிலே, தன்னுடைய உயர்ந்த நிலையை இழந்து, ‘ பட்ட மரம் துளிர்க்குமா ?’ என்ற நிலையில்தான் இன்றைய தமிழகம் இருந்து வருகிறது. பேணி வளர்த்த பண்பாட்டினைத் தொடர்ந்து பாதுகாக்கக் கூடிய சிறந்த பரம்பரையை தமிழகம் ஏற்படுத்தாமற் போனதே, தமிழகம் வீழ்ச்சியடைந்ததற்குக் காரணமாகும் ;

“ மேம்பாடுற்று விளங்கிய கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்களெல்லாம்கூட வீழ்ச்சியடைந்ததற்குக் காரணம், அந்நாட்டு மக்களிடையே நிலவிய உயர்வு—தாழ்வு, கீழோர்—மேலோர் என்ற சமுதாயப் பிளவுகளேயாகும்; அதுபோலவேதான், தமிழகம் வீழ்ச்சியுற்றுக் கீழ் நிலையை அடைந்ததற்கு, தமிழகத்தில் சாதி வித்தியாசம் புகுந்ததே காரணம்; எனவே, நாம் சாதி, சமயப் பூசல்களை ஒழிக்கவேண்டும். ‘ ஒன்றே குலம்—ஒருவனே தேவன்’ என்ற எண்ணத்தை—அந்த உயர்ந்த பண்பாட்டை வளர்க்க முன்வரவேண்டும் ; தமிழ் மொழியிலேயே பேசவும், எழுதவும் முன்வந்து, அவ்வாறு செய்வதில் பெருமையும் அடைய வேண்டும் ;

“ உலக வரலாற்றில் உன்னதமிக்க இடத்தைப் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்ந்த தமிழ் மக்கள், இன்று, இழிநிலையுற்று வாடுகிறார்கள் ; சிறப்பை இழந்து சீர்கெட்டுக்கிடக்கும் தமிழர்கள், தங்கள் நாகரிகம் மீண்டும் மேலோங்கி வளர்ந்து, உலக வரலாற்றிலும் இடம்பெற வேண்டுமென்றால், தங்களுக்கிடையே இருந்துவரும் சாதிப்பூசல்களைக் கண்டிப்பாக ஒழித்தே ஆக வேண்டும் ; அந்த சாதிப்பூசல்கள் இருக்கும் வரையில் எந்த விதமான உன்னத இலட்சியமும் ஈடேறாது ;

“ கதிரவனின் வெப்பத்தால் வெண்ணெய் உருகுகிறது ; அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் கைகளற்ற ஒரு ஊமையனின் நிலை எப்படி இருக்குமோ அதுபோலவேதான், இன்று தமிழர்களின் நிலைமை இருக்கிறது ; நமது உரிமைகள் குறித்து பல வாய்ப்புகள் இருந்தபோதிலும் செயலற்ற தன்மையில் இருந்துவருகிறோம் ;

“ தமிழகத்தின் வரலாறே சரியாகக் கிடைக்கவில்லை ; எனவே தமிழகத்தின் வரலாற்றைத் தொடர்ச்சியாகவும், கவர்ச்சியுடனும் தொகுத்துத் தரவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இன்றைய தமிழ்ப் பேராசிரியர்கள் முன்னிலையில் இருக்கிறது.”

—இவ்வாறு, அண்ணாதுரை அவர்கள், 25-8-55 மாலை 4½ மணியளவில், மதுரை தியாகராயர் கல்லூரி இளங்கோ மன்றச் சார்பில், திரு. தி. சுந்தரம் தலைமையில் நடைபெற்றக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசுகையில், தமிழ் நாட்டின் வரலாற்றைத் தொகுத்துக் கொடுக்க ஒரு புலவர் குழுவை நிறுவி, அதனை வெளியிட கருமுத்து—தியாகராசனார் குடும்பம் முன்வர வேண்டும் என்றும், தமிழ் மொழி ஆர்வமும், தமிழகப் பற்றும் மிகுந்த அளவில் கொண்டுள்ள அன்னாரின் குடும்பத்தார் வெளியிடும் தமிழக வரலாறு, தமிழ்ப் பண்பு மாறுபடாததாக இருக்கும் என்ற ஒரே நம்பிக்கையின்பேரில் தான் அப்பணியினை மேற்படி குடும்பத்தவர் மேற்கொள்ள வேண்டும் என்று தாம் கேட்டுக் கொள்வதாகவும் கூறியதுடன், தி மு கழகம், கடவுள் தன்மையையும், சமயத்தையும் எதிர்க்கவில்லையென்றும், எல்லா மக்களையும் நேசிக்கும் ஒற்றுமையினை உருவாக்கி வளர்க்கும் சமயம் ஒன்று ஏற்பட வேண்டுமென்றே விரும்புகிறது என்றும், இடைக்காலத்தில் புகுத்தப்பட்ட போலிச் சமயத்தையும், வேண்டாத சடங்கு, ஆச்சாரங்களையுமே தி. மு. கழகம் குறைகூறி வெறுத்து ஒதுக்குகிறது என்றும் கூறினார்.

மேலும் அண்ணா பேசுகையில் குறிப்பிட்டார் :—

“ மார்ட்டின் லூதர் தோன்றியிருக்காவிட்டால் கிறித்துவ மதமே தூய்மை அடைந்திருக்க முடியாது ; எனவே, சீர்திருத்தக் கருத்துக்களால் உலகிற்கு நன்மையே உண்டென்பதை உணர வேண்டும்.”

திட்டங்கள் தீட்டும் சர்க்கார் கவனத்திற்கு !

பம்பாய், ஆக. 28—

மாதம் ரூ. 80 சம்பளம் வாங்கும் ஒரு ஆலைத் தொழிலாளியின் மனைவி கர்ப்பமுற்றிருக்கும்போது, பிரசவ விடுதிக்குச் செல்ல வாடகை மோட்டார் தேடிக் கொள்ள முடியுமா ?

ராஜாராம் கபாலே என்ற அந்த ஊழியரின் மனைவிக்கு பிரசவ வேதனை கண்டது ; கையில் காசு இல்லை—பிரசவ விடுதிக்குச் செல்ல ; நடந்தே செல்வதெனப் புறப்பட்டார் ; வழியிலேயே பிரசவ வேதனை அதிகமாகவே அருகிலிருந்த ‘ கக்கூஸ் ’ ஒன்றில் ஒதுங்கினார் ; அங்கேயே அவருக்குப் பிரசவமாயிருக்கிறது — மூன்று பெண்களைப் பெற்றெடுத்திருக்கிறார் அங்கு !

விஷயம் தெரிந்த உறவினர்கள் அந்தப் பெண்மணியையும், குழந்தைகளையும் மருத்துவ மனையில் சேர்த்தனர். தாயும் சேய்களும் நலமாயிருக்கின்றனராம் !

இரவு வீடு திரும்பிய ராஜாராம், விஷயமறிந்து அதிசயப்பட்டதுடன், கவலையும் பட்டாராம் !

இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளத்தின் விற்பனைகளின் மொத்த மதிப்பு 1954—55-ம் ஆண்டில், அதற்கு முந்திய ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் 90 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. நடப்பு ஆண்டில், விற்பனைகளின் மதிப்பு மொத்தம் ரூ. 2.1 கோடி ; 1953—54-ம் ஆண்டின் விற்பனை மதிப்பு மொத்தம் ரூ. 1.16 கோடியாக இருந்தது.

‘இந்திய இலக்கியங்களை மேலைநாட்டிற்கு அறிவித்தவர் திராவிடர்களே’

‘தமிழ் இலக்கியம் தனித்து இயங்கவல்லது’

சவ மொழிப் பித்தர்களுக்கு பிரஞ்சுப் பேராசிரியர் தரும் சுவையடி

“ தமிழ் மொழி இலக்கியம் எதையுமே சார்ந்திருப்பதன்று ; கலாச்சார உபயோகத்தில் அது தனித்தே நின்று இயங்கும் வல்லமை கொண்டது ”

“ இந்திய இலக்கியங்கள் அனைத்தும் தென்இந்தியாவிலிருந்தே—அதுவும் திராவிடர்கள் மூலமாக — அவர்களிலும் குறிப்பாகத் தமிழ், மலையாளம் ஆகியமொழி பேசும் மக்களிடமிருந்துதான் ஐரோப்பிய நாடுகளில் அறிய முடிந்தது.”

“ ஐரோப்பாவிலிருந்து இந்தியா வந்த கிறித்துவப் பாதிரிமார்கள்கூட முக்கியமாகத் தமிழ் நாட்டில்தான் பணியாற்றியுள்ளனர் ; அவர்கள் தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளின் மூலமாகத்தான் சவ மொழியையும் கற்றிருக்கின்றனர்.”

“ 17-வது நூற்றாண்டுக் காலத்தில், தமிழ் மொழியின் இலக்கியச் செழுமை, சவமொழியினைவிட எவ்வளவோ முன்னேறியிருந்தது.”

இவ்வாறு, 28-ந் தேதியன்று சென்னை லயோலா கல்லூரியில், தமிழ்க்கலைக் கழகத்தின் சார்பில், திரு. ரா. பி. சேது அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சொற்பொழிவாற்றிய ‘ காலேஜ்-டி-பிரான்சை ’ச் சேர்ந்த பேராசிரியரான ஜே பிலியோஜாத் என்பார் தமிழ்மொழி பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், தமிழ்மொழி ஒன்றைத் தவிர, மற்றெல்லா இந்திய மொழிகளும் சவமொழிச் சார்புடையனவாகவே வளர்ந்தன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் தனிநாயகம் அவர்கள் பேசுகையில்,“ அரக்கிழக்கு நாடுகளிலெல்லாம் மதம், கலை, கட்டிட அமைப்பு ஆகியவைகளில் தமிழ் மணம் கமழ்கிறது’ என்று குறிப்பிட்டார்.

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் குடந்தை வருகை

21—8—55 காலை, தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் குடந்தைக்கு வருகை தந்தார்.

நூற்றுக்கணக்கான தோழர்கள் புகை வண்டி நிலையத்தில் திரண்டு நின்று தோழர் என். வி. நடராசன் அவர்களை வரவேற்றனர்.

காலை 10 மணிக்கு பஞ்சக்காரத் தெருவில், தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடைபெற்ற தோழர் சாமிநாதன்—தோழியர் மல்லிகா திருமணத்தில் சொற்பொழிவாற்றினார்கள். மற்றும் தோழர் வீரப்பாவும் ‘ திருமணம் ’ என்பது குறித்து விரிவுரையாற்றினார்.

அன்று மாலை பாணாதுறையில் தோழர் வில்லாளன் தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

துணைப் பொதுச் செயலாளர் அவர்கள் தி. மு. கழகத்தின் துவக்கம் குறித்தும், கழகத்தின் வளர்ச்சி குறித்தும் விரிவுரையாற்றினார்.

மதுரையில் அண்ணாதுரை

சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம்

25—8—55 மாலை 4½ மணிக்கு, திரு கருமுத்து தி. சுந்தரம் தலைமையில், மதுரை தியாகராயர் கல்லூரி இளங்கோ மன்றச் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு மாணவர் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தினார். மன்றத் துணைச் செயலாளர் தோழர் ஜி. இராமச்சந்திரன் அறிக்கை வாசித்தார்.

பின்னர், அண்ணா அவர்கள் ‘ உலக வரலாற்றில் நாம் ’ என்ற தலைப்பில், விளக்கவுரையாற்றினார்.

கல்லூரி மாணவர்களும், மாணவிகளும், ஆசிரியர்களும், பொது மக்களும் பெருந்திரளாகக் கூடி அண்ணா அவர்களின் சொற்பொழிவைக் கேட்டனர்.

சோழவந்தான் :

25—8—55 மாலை 6½ மணிக்கு, தி. மு. கழகச் சார்பில் வைகை ஆற்றில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் வே. சௌந்திராசன் தலைமை வகித்து முன்னுரையாற்றினார்.

தோழர்கள் எஸ். முத்து, அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசியதும், அண்ணா அவர்கள் சமூக—அரசியல்— பொருளாதார விடுதலைபெற, திராவிட நாட்டைத் தனி நாடாகப் பெற்றுத்தீர வேண்டுமென்றும், வறுமை, பஞ்சம்,பசி,பட்டினி ஆகிய கொடுமைகளிலிருந்து மக்கள் மீளவும், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவும், சமதர்மக் குடியரசு நடைபெற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்திய சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் வடநாட்டிலேயே வளமான திட்டங்களிட்டு, தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள், உர உற்பத்தித் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி, பாரபட்சமாக நடந்துகொண்டு, தென்னாட்டை திராவிடத்தை அடிமை நாடாக்கி ஆதிக்கம் செலுத்துவதுடன், கட்டாய இந்தியை இங்கு புகுத்தி வருகின்ற கொடுமையையும் விளக்கிப் பேசினார்.

பின்னர் கூட்டத்தில், கோவா அடக்குமுறை கண்டனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

அண்ணா அவர்கட்கு பல கிளைக் கழகச் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டு, மாநில மாநாட்டுக்கு நிதி முடிப்புகளும் வழங்கப்பட்டது.

பல கிளைக் கழகங்கள், கல்லூரிகள் மூலம் மாநில மாநாட்டு நிதிக்குக் கிடைத்த வசூலில் ரூ. 600 ஐ அண்ணா அவர்களிடம், மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து வழங்கினார். கூட்டம் இரவு 10½ மணிக்கு முடிவுற்றது.

திருச்சிக்குப் பயணம்

மதுரை மாவட்ட சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு அண்ணா அவர்கள், தமது குழுவினருடன் திருச்சிக்குப் பயணமானார். 26, 27—8—55-ந் தேதிகளில் திருச்சியில் தங்கி, மாநில மாநாட்டுக்கு வேண்டிய இடத்தையும், மற்ற வசதிகளையும், பிற ஏற்பாடுகளையும் குறித்துத் தோழர்களுடன் கலந்து பேசினார்.

28—8—55 காலை தென்னார்காடு மாவட்ட சுற்றுப் பயண நிகழ்ச்சிக்கு கடலூர் (என். டி.) சென்றார்.

செய்திச் சுருள்

★

சென்னை—எழும்பூர் அறிவு வளர்ச்சி மன்றம்

15—8—55ல், மேற்படி மன்றம் தி. மு. கழகத்துடன் இணைக்கப்பட்டது. அன்றைய தினமே மாவட்டச் செயலாளர் தலைமையிலும், துணைச் செயலாளர் முன்னிலையிலும் மறு தேர்தல் நடைபெற்றது. தோழர் டி. ஏ. பி. துரையைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

திருமணம்

21—8—55 காலை 9 மணி அளவில் தோழர் செ. முத்தழகிரி—தோழியர் சரோசா வாழ்க்கை ஒப்பந்த விழா, நாகப்பட்டினம் கல்லக்காரத் தெரு எண். 25. இல்லத்தில் திரு. வீ. பொ. பழனிவேலன் தலைமையில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தியும், சீர்திருத்த திருமணத்தின் அவசியம் பற்றியும் தோழர் டி. கே. சீனிவாசன் சொற்பொழிவாற்றினார். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துக்களும், பரிசுகளும் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. மணமக்கள் சார்பில் ‘நம் நாடு’ இதழுக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம் —நன்றி—பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

22—7—55 அன்று, செறுமுனை தி. மு. கழகத் தோழர் அன்பு கரு. அண்ணாமலை அவர்களது துணைவியார், ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். அம்மகவுக்கு ‘ மணிமொழி ’ எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக, ‘நம் நாடு’ இதழுக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

23—8—55 காலை 8 மணிக்கு பாத்திமாநகரைச் சேர்ந்த தோழர் பாண்டியனின் பெண்மகவுக்கு‘பூங்கோதை ’ என்று பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ‘நம் நாடு’ இதழுக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

அனுதாபம்

16—8—55 அன்று செம்பலம் தி. மு கழகத் தோழர் பி. கோபாலகிருஷ்ணனின் 1 வயதுடைய ஆண் மகவு இயற்கையெய்தியமைக்கு செம்பலம் தி மு கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

முகவரி மாற்றம்

சென்னை தோழர் அய்க்கண் அவர்களது சித்திரக்கூடம், சென்ற 17—8—55 முதல், ‘242, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1’ என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

‘அதிகமாக உழைத்தும் தவிப்பானேன்?’

விக்கிரமசிங்கபுரத்தில் அண்ணுதுரை கேள்வி

“தமிழ் நாட்டில் உள்ள விவசாயிகளும், தொழிலாளர்களும் இரவு பகலாகக் கண் தூங்காமல், அதிகமதிகமாக உழைக்கத்தான் செய்கிருர்கள்; ஆனுலும், அவர்கள் பஞ்சம், பட்டினியால் தவிக்கிருர்கள். இதற்குக் காரணம் என்ன என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்;

“புராணங்களையும், இதிகாசங்களையும் படித்துவிட்டால் மட்டும் போதாது; அவைகளால் ஏற்படும் தீமைகளையும் நாம் நன்கு கண்டறியவேண்டும்; புராண, இதிகாசங்களைப் படிக்கக் கூடாது என்று கூறுவது, கடவுளைக் குறை கூறுவதாகக் கருதவேண்டாம். கடவுள் பெயரால் ஒரு இனமக்கள் மற்ருெரு சாரரால் ஏமாற்றப்படக் கூடாது என்பதே பொருள்.”

—இவ்வாறு, அண்ணுதுரை அவர்கள், 19—8—55ல், விக்கிரமசிங்கபுரத்தில், தோழர் பி. ஏ. சாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

தொடர்ந்து அவர் பேசினுர்:—

“மதத்தையோ, பார்ப்பனரையோ நாங்கள் கண்டித்தால் மதவாதிகள் வருந்த வேண்டாம்; நாங்கள், குறைபாடுகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அவற்றில் சீர்திருத்தம் செய்யவே முற்பட்டுள்ளோம்;

“திராவிட முன்னேற்றக் கழகம் உண்மையான அடிப்படைத் தத்துவங்களைப் போதித்து வருவதால்தான், தி. மு. கழகத்தில் ஒரு இலட்சம் பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கின்றனர்; ஆயிரத்துமுன்னூறு கிளைக் கழகங்கள் தோன்றியிருக்கின்றன;

“திராவிட இன மக்கள், தங்களைப் பூட்டி வைத்திருக்கும் வடநாட்டு அடிமை விலங்கினை அறுத்தெறிய வேண்டுமென்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டு வருகிறது.”

புத்தரின் 2,500-வது பிறந்த நாள்

ரூ. ஒரு கோடி செலவில் கொண்டாட ஏற்பாடுகள்

இந்திய சர்க்கார் நடவடிக்கை

புதுடில்லி, ஆக. 29—

புத்தரின் 2,500-வது பிறந்த நாள் விழாவினை, நாடெங்கும் எல்லா முக்கியமான புத்த நகரங்களிலும் வரும் 1956 மே திங்களில் விரிவாகக் கொண்டாடுவதென முடிவு செய்து, இந்திய சர்க்கார் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

இந்த விழா ஏற்பாடுகளுக்காக சுமார் ஒரு கோடி ரூபாய் வரையில் செலவிடவும் உத்தேசித்திருக்கின்றனர்.

காற்ருடிக் குழாய்கள் நிறுவும் திட்டம்

புதுடில்லி, ஆக. 30—

மாநில சர்க்கார் கூட்டுறவுடன், காற்ருடிக் குழாய்கள் நிறுவுவதற்கான திட்டத்தை நடத்துவதற்கு ‘காற்று விசை அபிவிருத்தி டைரக்டர் காரியாலயம்’ அமைக்க இந்திய சர்க்கார் யோசிப்பதாகவும், செப். 3-ந் தேதியன்று இதுபற்றி முடிவு செய்யப்படுமென்றும் கூறப்படுகிறது.

‘இந்துமத தெய்வ வழிபாடு சுதந்திர மனிதர்களை உண்டாக்கவில்லை’

‘அடிமைப் போக்கையே வளர்த்து வந்திருக்கிறது’

போடியில் அண்ணு குற்றச்சாட்டு

“நம் நாட்டிலுள்ள இந்து மதத்தவர் வணங்குகின்ற தெய்வப் பண்பாடுகளில், மனிதனின் அறிவை வளர்த்து சுதந்திர மனிதனுக்குவதற்குப் பதில், அடிமைப் போக்கினை வளர்ப்பதற்குரிய தத்துவங்கள் நிறைய இருக்கின்றன,”

என்று, அண்ணுதுரை அவர்கள், 24—8—55ல், போடிநாயக்கனூரில், தோழர் சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும், அண்ணு அவர்கள் குறிப்பிட்டார்:—

“நம்முடைய திராவிட நாடு நான்கு மொழிகளைப் பேசும் மக்களை உள்ளடக்கியது; அந்தத் திராவிடத்தை நாம் அடையத்தான் போகிறோம்;

“வடநாட்டவரின் கைப்பிடியில் சிக்கிக் கிடக்கும் அந்நாடு, சீரும்—செல்வமும் அற்று சீரழிந்து கிடக்கிறது; நம்மிடத்திலிருந்து வரிகள் மூலம் பணம் பணமாகக் கொள்ளையிட்டுவரும் வடநாட்டு ஏகாதிபத்தியம், நம்மிடமிருந்து வசூலித்த தொகையில் ரூபாய்க்கு 2 அணு வீதம்தான் நமக்குத் திருப்பித்தருகிறது; ஆனுல், பாக்கித் தொகையையோ, தங்கள் நாடு—வடநாடு வாழ்வுறச் செய்வதற்கான வழிதுறைகளில் பயன்படுத்தி, நம்மை ‘தவிக்கவிடு’கிறது;

‘நம் நாடு—திராவிட நாடு, வாழ்க்கை வசதிக்குரிய எல்லாச் செல்வங்களையும் பெற்றிருக்கிறது; நமது நாடு மூவேந்தர்கள் ஆண்ட நாடு; அந்த நாட்டை நாம் தனியாகப் பிரித்துத்தான் ஆளவேண்டும்.”

‘எல்லோருக்கும் வேலையும், வாழ்க்கைவசதிகளும் தரவேண்டும்’

அதற்காகவே ஓய்வு ஒழிவின்றி வேலை செய்வாராம்!

பண்டிதரின் வாய் வீச்சு

திப்ருகார், ஆக. 29—

“இந்த நாட்டின் பரந்த நிலப்பரப்பு முழுமையிலும் வாழும் மக்கள் எல்லோருக்கும் உணவு, உடை, இருப்பிடம், நல்ல குடிதண்ணீர், மருத்துவ உதவி, கல்வி, வேலை ஆகியவை கிடைக்கும் வரை நான் ஓய்வு ஒழிவின்றி வேலை செய்வேன்,”

என்று, பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிருர்.

ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கியத்துவத்தை விளக்கிப் பேசிய அவர், குறிப்பிட்டதாவது:—

“திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள இலட்சிய எல்லைகளை அடைவதற்கு மக்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்; ஒரு நாட்டின் செல்வம் என்பது தங்கமோ, வெள்ளியோ அல்ல; மாருக, மக்களின் அறிவும், உழைப்பும்தான் உண்மையான செல்வங்கள்; ஒரு நாட்டின் வளம் அந்த நாட்டின் உற்பத்தியைப் பொறுத்திருக்கிறது; தொழிலாளர்களின் உண்மை உழைப்பைப் பொறுத்ததுதான் உற்பத்தி!

“இன்றுள்ள கல்வி முறை, இன்றைய இளைஞர்களை நாட்டின் நல்ல குடிமக்களாக்குகிற வகையில் மாற்றி அமைக்கப்படவேண்டும்; அந்தக் குடிமக்கள், நன்கு உழைக்கக்கூடியவர்களாக—நாட்டுப் பற்றுக் கொண்டவர்களாக — நாட்டின் நலனுக்காக செல்வத்தையோ உழைப்பையோ வெறுப்பின்றித் தரக்கூடியவர்களாக அமைய வேண்டும்; அப்போதுதான், நம்மிடையே ஒரு ‘சோஷலிச மாதிரி சமூக’த்தை அமைப்பது சாத்தியமாகும்;

“ஒற்றுமையையும், வளத்தையும் பெறுவதற்காக, இந்தியர்கள் தங்களிடையேயுள்ள குறுகிய மனப்பான்மையை, வகுப்பு, சாதி, மாகாண வெறிகளை விட்டொழிக்க வேண்டும்; இவைதான் இந்தியாவின் முன்னேற்றத்தைத் தடுப்பவைகளாகும்.”

மாதவரம் பிர்க்கா தி.மு. கழக செயற்குழுஉறுப்பினர்களுக்கு

“மாதவரம் பிர்க்காவை பொன்னேரி தாலுகாவில் இணைத்துவிட்டபடியால், நம் கொள்கை பரவாத சிற்றூர்கள் அதிகமாக இருக்கிறபடியால் நாம் செய்ய வேண்டிய கழகப் பணிகள் நம் முன்னுல் நிறைய இருக்கிறது; ஆகவே 4—9—55 ஞாயிறு பகல் 12 மணிக்கு மாதவரம் தோழர் செயராசு அவர்கள் இல்லத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்; எனவே, முக்கிய உறுப்பினர்கள் அனைவரும் வருகைதந்து கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுகிறேன்.”

என்று, கொடுங்கையூர் தி. மு கழக மாவட்டப் பிரதிநிதி தோழர் மு. இராசன் அறிவிக்கிருர்.

43-வது வட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

1—9—55 வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு மேற்படி கழகப் பணி மனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

‘நெருக்கடி ஏற்பட்டால் திரும்பி வருவேன்’

கள்வன் காட்டும் ‘தாராளம்!’

ஜோத்பூர். ஆக. 29—

இராஜஸ்தானில் ஒரு சர்க்கார் அதிகாரியின் வீட்டில் புகுந்த கள்வனொருவன், பெட்டியில் ரூ. 300-க்குக் ‘கரன்சி நோட்டு’கள் இருந்ததைக் கண்டுள்ளான்; அதில், ரூ. 50 மட்டும் எடுத்துக் கொண்ட அவன், ரூ. 50 மட்டுமே தற்போது தனக்குத் தேவையாக இருக்கிறதென்றும், ‘நெருக்கடி’ ஏதேனும் ஏற்பட்டால் மீண்டும் அதே வீட்டிற்கு வருவதாகவும், ஒரு குறிப்பை எழுதிவைத்து விட்டுச் சென்றுவிட்டானும்!

சூடான் விவகார எதிரொலி?

எகிப்து வழிகாட்டி அமைச்சர் பதவியிலிருந்து விலகுகிருர்

கெய்ரோ, ஆக. 29—

எகிப்து தேசிய வழிகாட்டி, சூடான் விவகார அமைச்சரான மேஜர் சாலே சலீம் பதவியிலிருந்து விலகிக்கொள்கிருர்.

நிர்வாக செய்தி அறிவிப்பு இலாகா டைரெக்டராயிருந்த ‘கர்னல் அப்தெல் காதர் ஹதீம் என்பார், சலீம் பதவியில் பொறுப்பேற்றிருக்கிருர்.

மன்னன் பரூக் வீழ்த்தப்பட்டு, இப்போதைய இராணுவ ஆட்சி துவங்கிய நாள் முதல், சலீம், தேசிய வழிகாட்டி அமைச்சராக இருந்து வந்திருக்கிருர்.

காலவரையறை இன்றி பதவியிலிருந்து நீங்கிக்கொண்டிருக்கும் சலீம் பற்றி அதிகாரபூர்வமான அறிக்கை எதும் வெளியிடப்படமாட்டாதாம்.

சூடான் விவகாரத்தில் சலீம் மேற்கொண்ட கொள்கை தோற்றுப்போய்விட்டதின் எதிரொலியாகவே சலீம் அரசியல்வானிலிருந்து மறைகிருர் என்று அரசியல் விமர்சன வட்டாரம் தெரிவிக்கிறதாம்.

ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்பு தனது சகோதரரான காமெல் சலீம் என்ற உதவிப் பிரதமருடன், தான் ஈராக் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை ஒட்டி எழுந்த தகராறுக்காக, பதவியிலிருந்து விலகிக்கொள்வதாக விலகல் கடிதம் ஒன்றை மேஜர் சலீம அனுப்பிவைத்தார்; ஆனுல், அவர் தொடர்ந்து பதவி வகிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

கடந்த செப்டம்பரில் அவர் ஓய்வு எடுத்துக்கொள்ளச் சென்றிருக்கிருர் என்று ஒரு அறிக்கையும் மறுநாளே, அவர் தன் ஓய்வு நாட்களைக் குறைத்துக்கொண்டு பதவி ஏற்றுவிட்டார் என்று ஒரு அறிக்கையும் வெளிவந்தன

பின்னர் கடந்த அக்டோபரில் மேஜர் சலீம் மீண்டும் சூடானிலுள்ள கார்டூமுக்குச் சென்று பிரதமர் அஜாரியுடன் சூடானின் எதிர்காலம் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினர். அவரது இந்தச் செய்கை, உம்மா கட்சியிலிருந்து புதியதொரு எதிர்ப்பைக் கிளப்பியது.

4,600 குழந்தைகள் நலமிழந்தனர்!

ஜப்பானில் சோக நிகழ்ச்சி

டோக்கியோ, ஆக. 28—

நஞ்சு கலந்த உணவை உட்கொண்டதால் ஜப்பான் நாட்டில் 4,600 பச்சிளம் குழந்தைகள் உடல் நலமிழந்திருப்பதாகவும், குறைந்தது 42 குழந்தைகளேனும் மாண்டிருக்க வேண்டுமென்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

‘பால் பவுடர் டின்’களில் இந்த நஞ்சு கலந்திருக்கக் கூடுமென மருத்துவ அதிகாரிகள் கருதுகின்றனராம்; இதுபற்றி ஆராயப்பட்டுவருகிறதாம்.

ஜப்பானில் ஒரு பெரிய நிறுவனம் பால் பவுடர் தயாரிக்கிறது; பால் பவுடர் தயாரிப்பதற்குத் தேவையான சுண்ணும்பு அருகில் உள்ள சுரங்கம் ஒன்றிலிருந்து எடுக்கப்படுகிறது; இச்சுரங்கத்திற்கு அருகிலேயே ‘ஆர்செனிக்’ என்ற வெள்ளைப் பாஷாணச் சுரங்கம் ஒன்றும் இருக்கிறது; இந்த நஞ்சும்,’ சுண்ணும்பும் தற்செயலாகக் கலந்திருக்கக்கூடும் எனக் கூறப்படுகிறது.

பால் பவுடரில் கதிரியக்கச் சக்தி இருப்பதாகவும், அது குழந்தைகளுக்கு ஆபத்தானது என்றும், ஒஸ்கா பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்திருக்கிருராம். இது குறித்து, சுகாதார அதிகாரிகள் உறுதியான தகவல் எதும் தரவில்லையாம்.

கைத்தறித் தொழில் அபிவிருத்தி

மத்திய சர்க்கார் நிதி உதவி

இந்திய சர்க்கார், கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்காக பல்வேறு மாநிலங்களுக்கும், அகில இந்திய கைத்தறி போர்டுக்கும் சகாயத் தொகையாகவும், கடன் உதவியாகவும் மேற்கொண்டு சுமார் ரூ. 20 லட்சம் வழங்கியுள்ளனர்.

இந்த ஆண்டு அக்டோபர் திங்களில் புதுடில்லியில் நடைபெற விருக்கும் இந்திய தொழிற் கண்காட்சியில் கலந்துகொள்வதற்காக, மொத்தம் ரூ. 4,49,000வரை செலவிட அகில இந்திய கைத்தறி போர்டுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

மத்திய விற்பனை நிறுவனத்தை சேர்ந்த பிராந்திய காரியாலயங்களில், கைத்தறித் துணிகளுக்காக, ஏற்கனவே பம்பாயில் உள்ள காட்சி அறையைத் தவிர மேற்கொண்டு புதிதாக 11 காட்சி அறைகளைத் திறந்துவைப்பதற்காக, மொத்தம் ரூ. 3,51,100 வரை செலவிட அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

புதுவைக்குக் கடனுக சுமார் ரூ. 28,400ம், சகாயத் தொகையாக ரூ. 4,890-மும் வழங்கப்பட்டிருக்கிறது.

சௌராஷ்டிராவுக்குக் கடனுக ரூ. 1,56,250; பிகாருக்கு சகாயத் தொகையாக ரூ. 1,00,000; ஆஜ்மீருக்குக் கடனுக ரூ. 15,000-ம், சகாயத் தொகையாக ரூ. 9,000; போபாலுக்குக் கடனுக ரூ 10,500-ம், சகாயத் தொகையாக ரூ. 8,000 பெப்சுவுக்கு சகாயத் தொகையாக ரூ. 13,750-ம், கடனுக ரூ. 750-ம் வழங்கப்பட்டிருக்கிறது

கைத்தறி, பட்டு உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்காக, சென்னைக்குக் கடனுக ரூ. 69,700; ஐதராபாத்துக்கு இரு கடன்களாக மொத்தம் ரூ 4,96,500-ம், சகாயத் தொகையாக ரூ. 23,000; மணிப்பூருக்குக் கடனுக ரூ 23,650-ம், சகாயத் தொகையாக ரூ 6,250 வழங்கப்பட்டிருக்கிறது.

கைத்தறி செயற்கைப் பட்டு உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்காக டில்லிக்குக் கடனுக சுமார் ரூ. 5,500-ம், சகாயத் தொகையாக ரூ 2,000 வழங்கப்பட்டிருக்கிறது.

கைத்தறி கம்பளி உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்காக இராஜஸ்தானுக்குக் கடனுக ரூ. 35,000-ம் சகாயத் தொகையாக ரூ. 16,459-ம் வழங்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதி

மாநிலங்களுக்கு நிதி உதவி

புதுடில்லி, ஆக. 29—

மாநிலங்களில் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு, மாநிலங்களுக்குக் கடனுகவும், மானியமாகவும் ரூ. 13,95,675 கொடுத்துதவ மத்திய சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இதில் திரு-கொச்சி சர்க்கார் ரூ. 1,35,000 மானியமாகவும், அதே அளவு கடனுகவும் பெறுவர்.

பெங்களூரில் தனிப்பட்ட முதலாளிகள் இருவருக்கு ரூ. 7,47,675 வழங்கப்படும்; இதில் ரூ 4,48,605 கடனுக பாவிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.